**MCOP NO. 66/2021**

**Date 17.04.2026**

**Pw 1 பொன்துரைச்சி**

**2ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது. எனது அப்பா இறக்கும் போது அவருக்கு வயது 51–55 இருக்கும். எனது அப்பா கொத்தனார் வேலை செய்து வந்து மாதம் ரூ. 21,000/– சம்பாதித்து வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது வாசுதேவநல்லூர் பேரூந்து நிலையத்திற்கு வடக்கே நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி நான் எனது கணவரின் வருமானத்தை வைத்து தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் எனது தந்தையும் பண உதவி செய்வார். நான் எனது தந்தையின் வருமானத்தை சார்ந்திருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவின் தற்கவனமின்மையும் இந்த விபத்திற்கு காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய பேரூந்தின் ஓட்டுநர் சாலை விதிகளை கடைப்பிடித்து மெதுவாக ஓட்டினார் என்றாலும், அதிவேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி பேரூந்திற்கு விபத்துக்காலத்தில் அனுமதி சான்று எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனுமதி சான்று இல்லாமல் 1ம் எதிர் மனுதாரரின் வாகனம் இயக்கப்பட்டது என்பது காப்பீட்டு விதிகளுக்கு எதிரானது என்பதால் 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் போடப்பட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரைப்பொருத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.